# ஆகஸ்ட் - 04 - வெள்ளி

## புனிதஜோன் மேரி வியன்னி

**“என் மக்கள் என் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை“ திபா 81:10**

## முதல் வாசகம் : லேவியர் 23:1,4 –11,15 -16,27,34- 37

ஆண்டவர் மோசேயிடம் கூறியது: நீங்கள் சபையாகக் கூடிக் குறிப்பிட்ட நாள்களில் புனிதமாய்க் கடைப்பிடிக்க வேண்டிய ஆண்டவரின் பண்டிகை நாள்களாவன. முதல் மாதம் பதினான்காம் நாள் மாலையில் ஆண்டவருக்கான பாஸ்கா.அந்த மாதம் பதினைந்தாம் நாள் ஆண்டவருக்கான புளிப்பற்ற அப்பப் பண்டிகைக் ஏழுநாள் புளிப்பற்ற அப்பங்களை உண்பீர்கள்.பண்டிகையின் முதல் நாள் சபைகூடும் புனிதநாள். அன்று வேலை செய்யலாகாது.ஏழுநாளும் ஆண்டவருக்கு எரிபலி செலுத்த வேண்டும். ஏழாம் நாள் சபை கூடும் புனித நாள். அன்று வேலை செய்யலாகாது.ஆண்டவர் மோசேயிடம் கூறியது: இஸ்ரயேல் மக்களிடம் நீ சொல்ல வேண்டியது. நான் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டில் நீங்கள் வந்து அறுவடை செய்யும் போது அறுவடையின் முதல் விளைச்சலான ஒரு கதிர்க் கட்டினைக் குருவிடம் கொண்டுவர வேண்டும்.உங்கள் சார்பாக ஏற்கத் தக்கதாக, குரு அந்தத் தானியக் கதிர்க்கட்டினை, ஓய்வு நாளுக்குப் பின்வரும் அடுத்த நாளில் ஆண்டவரின் திருமுன் ஆரத்திப் பலியாக்குவார். ஆரத்திப் பலியாகக் கதிர்க்கட்டினைக் கொண்டுவந்த ஓய்வு நாளின் மறு நாளிலிருந்து ஏழு வாரங்களைக் கணக்கிடவும்.ஏழாம் ஓய்வு நாளுக்கு மறுநாளான ஐம்பதாம் நாளில் ஆண்டவருக்குப் புது உணவுப் படையலைச் செலுத்துங்கள்.அந்த ஏழாம் மாதம் பத்தாம் நாள், பாவக் கழுவாய் நாள் புனிதசபை கூடும் நாள். அன்று நீங்கள் உங்களையே தாழ்த்திக்கொண்டு, ஆண்டவருக்கு எரிபலி செலுத்த வேண்டும். நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறவேண்டியது. ஏழாம் மாதம் பதினைந்தாம் நாளன்று ஆண்டவரின் கூடாரப் பெருவிழா தொடங்குகின்றது. அது ஏழுநாள்கள் தொடரும்.முதல்நாள் திருப்பேரவை கூடும் நாள் அன்று எத்தகைய வேலையையும் செய்யவேண்டாம்.ஏழு நாள்களும் ஆண்டவருக்கு நெருப்புப்பலி செலுத்துங்கள். எட்டாம் நாளன்று திருப்பேரவை கூடும் அன்றும் ஆண்டவருக்கு நெருப்புப்பலி செலுத்துங்கள். அது நிறைவுநாள். அன்று எத்தகைய வேலையையும் செய்யலாகாது.ஓய்வுநாளில் ஆண்டவருக்குச் செலுத்தும் காணிக்கைகள், நேர்ச்சைகள், தன்னார்வப் பலிகள் தவிர,அந்தந்த நாள்களுக்கு ஏற்ப, எரிபலி, உணவுப்படையல், இரத்தப்பலி, நீர்மப்படையல் முதலிய பலிகளைச் செலுத்தத் தக்கதாகவும் சபையாய்க் கூடி அந்த நாளைப் புனிதமாய்க் கடைப்பிடியுங்கள். இவையே நீங்கள் கொண்டாட வேண்டிய விழாக்கள்.

**பதில்பாடல் :** நமது வலிமையாகிய கடவுளை மகிழ்ந்து பாடுங்கள்

## நற்செய்தி : மத்தேயு 13 : 54 - 58

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்து அங்குள்ள தொழுகைக் கூடத்தில் அவர்களுக்குக் கற்பித்தார். அதைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்கள், ”எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்?இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர்தானே? யாக்கோப்பு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா?இவர் சகோதரிகள் எல்லாரும் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?” என்றார்கள்.இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள்.இயேசு அவர்களிடம், ”தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப்பெறுவர்” என்றார்.அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் அங்குப் பல வல்ல செயல்களைச் செய்யவில்லை.

**தியானம்:** “நசரேத்தூர் இயேசு” யார்? அவர் எப்படிப்பட்டவர்? இறைமகன் இயேசு எப்படிப்பட்டவராக இருக்கின்றார்? என்ற பலவினாக்கள் எமதுள்ளத்தில் எழக்கூடும். இயேசுவை அதிகம் அறிந்து, வைத்திருக்கிறோம் எனத்தம்பட்டம் அடிக்கின்றோம். ஆனாலும் “இயேசு யார்?” என்ற உண்மையை சரிவரப் புரிந்து கொள்ளமுடியாத பேதைகளாக இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றோம். ஆதலால், எமது விசுவாசத்தை நாமே ஆழமாக ஆராய்ந்து பார்ப்போம். இன்றைய நற்செய்தியில் நசரேத்தூர் மக்களுக்கு நன்கு பரிச்சயமான “தச்சன் சூசையின் மகனாக” இறைமகன் இயேசு தென்படுகின்றார். அம்மக்கள் அவ்வேளையில் இறைமகன் இயேசுவின் பாடுகளையோ, அல்லது அவரது உத்தானத்தின் மகிமையையோ கண்டிராத நிலையிலேயே அன்று அவ்வாறு தென்பட்டார். இதுபோன்ற ஒருநிலையே இயேசுவின் சீடர்களுக்கும் ஏற்பட்டதால் பணத்தாசையால் காட்டிக்கொடுத்தது, பயந்து மறுதலித்தது மட்டுமல்ல, உயிருக்குப் பயந்து கைவிட்டு ஓடும்நிலையும் ஏற்பட்டது. எனினும் தூய ஆவியின் வல்லமையால் தொடப்பட்டதும் “இயேசுவே ஆண்டவர்” என பகிரங்கமாக அறிக்கை செய்தார்கள். ஆதலால், அன்றைய சீடர்கள் போன்று நாமும் இன்று அறிக்கை செயகிறோமா? அல்லது, நசரேத்தூர் மக்கள் போன்று “எங்கிருந்து இவருக்கு இந்த ஞானம் வந்தது” என வினாவுகின்றோமா? ஏனெனில், இறைமகன் இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமல்ல, நாங்களும் இறைமகன் இயேசுவை அதிகம் அறிந்து, தெரிந்து வைத்திருக்கிறோம் எனத் தம்பட்டம் அடிக்கின்றோம் ஆனாலும் “இறைமகன் இயேசு யார்?” என்ற உண்மையை சரிவரப் புரிந்து கொள்ளமுடியாத பேதைகளாக வாழ்ந்து வருகின்றோம். எனவே, நாம் இவ்வுலக மனித வல்லமைகளில் நம்பிக்கை வைப்பதனை விடுத்து இறைமகன் இயேசுவில் மாத்திரம் நம்பிக்கை வைத்து வாழ்வோம். இவ்வுலகில் மட்டுமல்ல, மறுவுலகிலும் இறைமகன் இயேசு எமக்கு உறைவிடம் அமைத்துத் தருவார்.